செ.வெ.எண்.03 நாள்.03.04.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 56 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதி மற்றும் பல்வேறு துறைகளின் மூலம் ரூ.24.69 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.04.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதி திட்டத்தின் கீழ், இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.58,690/– மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், புனித அன்னாள் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளிக்கு ரூ.12,720/– மதிப்பிலான குடிநீர் சுத்திகரிப்பு சாதனத்தினையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை மானியமாக சிவகிரி வட்டம், விஸ்வநாதபேரி கிராமத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு சிறிய பெட்டிக்கடை வைத்து தொழில் துவங்குவதற்கு ரூ.20 ஆயிரத்திற்கான காசோலையினையும், ஆலங்குளம் வட்டம், வடக்கு கிடாரங்குளத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு பால்பண்ணை தொழில் துவங்குவதற்கு ரூ.34,920/–த்திற்கான காசோலையினையும், சங்கரன்கோவில் வட்டம், மேலஇலந்தைகுளத்தைச் சார்ந்த முத்துப்பாண்டி என்பவரின் மகன் புங்கராஜ் மற்றும் மகள் பாரதி ஆகியோருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.69,900/–த்திற்கான காசோலையினையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீருதவி உதவித் தொகையாக 2 பயனாளிகளுக்கு தலா ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலைகளையும், 5 பயனாளிகளுக்கு தலா ரூ.1.20 இலட்சத்திற்கான காசோலைகளையும், ஒரு பயனாளிக்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும், 5 பயனாளிகளுக்கு தலா ரூ.22,500/–க்கான காசோலைகளையும் என 13 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.10,62,500/– மதிப்பிலான தீருதவித் தொகையினையும், சங்கரன்கோவில் வட்டத்தைச் சார்ந்த 5 நபர்களுக்கு தலா ரூ.75 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், வருவாய்த் துறையின் மூலம் தென்காசி வட்டம், ஆவுடையானூர், சாலடியூர் கிராமத்தைச் சார்ந்த 24 நபர்களுக்கு ரூ.7,66,500/– மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், திருநெல்வேலி வட்டத்தைச் சார்ந்த 5 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், சமுக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி வட்டத்தைச் சார்ந்த இரண்டு பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், கடையநல்லூர் வட்டம், புளியங்குடியைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினையும் ஆக மொத்தம் 56 பயனாளிகளுக்கு ரூ.24,68,920/– மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.ஆர்.விஜயலெட்சுமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி. நிர்மலா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.சாந்திகுளோரி எமரால்ட், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாவட்ட ஆட்சியரின் அலுவலக மேலாளர் (வருவாய் பிரிவு) திரு.தேவர்பிரான், சங்கரன்கோவில் வட்ட ஆதிதிராவிடர் நல வட்டாட்சியர் திரு.சாம்பமூர்த்தி, தென்காசி வட்டாட்சியர் திருமதி.அனிதா, சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் திரு.செல்வநாயகம், திருமதி.மோகனா உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.